Kavignan

# கவிஞன்

WWW.KAVIGNAN.COM

## காலாண்டுக் கவிதையிதழ்

## தைப்பொங்கல் சிறப்பிதழ்



ஆண்டு 2013

இதழ் 22

தை மாசி பங்குனி

விலை 60/=

Kavignan
# கவி ஞன்

**தோற்றம் : 27, பங்குனி 2010**




**தை, மாசி, பங்குனி - 2013**

பிரதம ஆசிரியர் : சதாசிவம் மதன்

தொ.பே : 0094 77 3620328
0094 65 3650153

முகவரி : கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு, 30158,
மட்டக்களப்பு, இலங்கை.

மின்னஞ்சல் : kavignan@live.com

இணையத்தளம் : www.kavignan.com

# உள்ளே

## உள்ள படைப்பாளிகள்

கதிரவன் த.இன்பராசா
நிலாதமிழின்தாசன்
அம்பிளாந்துறையூர் அரியம்
மு.தவராசா
அக்கரைப்பாக்கியன்
புதுமைவாணன்
பொன்.சின்னத்தம்பி
மண்டூர் அசோகா
கலாபூசணம் மா.கந்தசாமி
எஸ்.பி.பாலமுருகன்
சிந்ரா
செங்கதிரோன்
கவிஞர் மு.முருகேஷ்
மேமன் கவி
கவிஞர் நிலாபாலன்

**தொகுப்பாசிரியர் (இதழ் - 22) :**
கதிரவன் த. இன்பராசா

**அட்டைப்படம் வடிவமைப்பு :**
திரு. சி. சிவப்பிரதீபன்

**பிரதம ஆலோசனை :**
திரு. வே. தட்சணாமூர்த்தி
திரு. S. P. நாதன்

## இலக்கிய ஆர்வலரா நீங்கள்?

**அப்படியானால் கவிஞன் தொடர்ச்சிக்கு நீங்களும் உதவலாம்!**

இவ்விதழ் பின்வருவோரின் நிதியுதவியால் வெளிவருகின்றது..

திரு. காசுபதி நடராசா, கவிஞர். செல்லிதாசன், திரு. த. இன்பராசா திரு. சௌந். லெனாட் லொறன்ஸோ, திரு. சி. புவனேந்திரன், திரு. கி. மகிந்தன், திரு. சு. இளங்கீரன், கல்வியூர். விஜயபாரதி, திரு. த. காண்டீபன், திரு. சி. பிரவு

Kavignan
# கவி ஞன்

## உங்களுடன் ஒரு நிமிடம்

தமிழர் திருநாள், உழவர் திருநாள் என்று அனைவராலும் போற்றப்படுகின்ற தைப்பொங்கல் தினம் உலகத் தமிழர்க்கே உரித்தான உரிமை தினம். தமிழரின் நன்றியுணர்வைப் பறைசாற்றும் உன்னத தினம். மனிதனுக்கு மனிதனே நன்றிபககிரா நேரத்தில் பயிருக்கும், எருதுக்கும், சூரியனுக்கும் நன்றி சொல்லும் தமிழரின் பண்பை தலைநிமிர்த்தும் தினம்.

இது மதம் கடந்து, சாதி, பேத நிலை கடந்து. எமது பாரம்பரியத்தின் தொன்மை சார்ந்தது. இதனாலேயே இதற்கான சிறப்பிதழ் பொருத்தமானது எனத் தோன்றிற்று. அதனால் கவிஞன் சஞ்சிகை, செங்கதிர், கதிரவன், மணிப்புறா ஆகிய சஞ்சிகைகளுடன் இணைந்து நடத்திய பொங்கலாம் வாங்க எனும் கவியரங்கின் பதிவுகள் இதிலே சிதறிக்கிடக்கின்றன.

அன்புடன்,
ஆசிரியர்

---

## வருடச் சந்தா ரூபா 500.00

வருடச் சந்தா தொகையினைக் காசுக்கட்டளை மூலமாக அனுப்ப முடியும்.

**அனுப்ப வேண்டிய தபாலகம்** : புதுக்குடியிருப்பு.

**முகவரி** : ச. மதன், கூட்டுறவுக் கடை வீதி, புதுக்குடியிருப்பு (கி.மா), மட்டக்களப்பு.

# பொங்கலாம் வாங்க நற்கவி தாங்க

கதிரவன்

தங்கு தடையின்றி
சங்கத் தமிழ் வாழ
எங்கள் முதல் இறையோனின்
பங்கயத் தாழ் பணிவோம்

உழவர் நல் திருநாளில்
உளமகிழப் பொங்கலிட்டு
பகலவனை வரவேற்று
படைக்கின்றேன் கவிப்படையல்

“பொங்கலாம் வாங்க” எனும்
மங்கலக் கவிதைகளை
அரங்கிலே பொங்க வந்த
தங்கக் கவிஞர்களே !

“செங்கதிர்” சிற்றிதழின்
சிறந்த நல் ஆசானே
திங்களென ஒளிவீசும்
“செங்கதிரோன் பெருந்தகையே”

புவியாளும் கவிஞர்களின்
கவியரங்கக் கவிதைகளை



செவியாறக் கேட்க வந்த
சிறப்பு மிகு அதிதிகளே !

கவியரங்கில் கலப்பதினால்
காலத்தைப் பொன்னாக்கும்
கவிஞர்களே! ஆர்வலரே!
கலைஞர்களே! அனைவருக்கும்

புதுவையூர் கண்ணகையாள்
புனித மண் வீற்றிருக்கும்
“கதிரவன்” கவிஞன் இதழ்
கனிவான தமிழ் வணக்கம்
பொங்குவது எங்கே?
புசிப்பது எங்கே
உங்கள் திருநாட்டில்
ஆனாலும் பொங்குவோம்
அழகாகத் திங்குவோம்
எங்கள் திருநாட்டில்

“நெருப்பு” தமிழ் தாசனிடம்
“அகப்பை” தவ ராசாவிடம்
பாண்டிருப்பு “அகரம்”
பச்சரிசி மூடையுடன்

பக்குவமாய்ப் “பாலூற்ற”
புதுவாணன் பாத்திருக்க
“சர்க்கரைப்” பையுடன்
அக்காவும் காத்திருக்க . . .

நக்கலாய் “சிந்ரா”
என்னிடம்தான் “பானை” என்றான்
அக்கரைப் பாக்கியரோ . . . ?
சிக்கலின்றிப் பொங்கிடுவார்

சூறாவளி சுழன்றடித்து
சுக்குநூறாய் ஆக்கிடினும்
சுனாமி பாய்ந்தடித்து
சின்னாபின்னமாக்கிடினும்
கடும் வெள்ளம் பெருக்கெடுத்து
கதிகலங்க வைத்தாலும்
கொடும் யுத்தக் கொடுமைகளால்
கொலைக்களத்தில் மடிந்தாலும்

சிறைப்பட்டுச் சீரழிந்து
சிறையிலே சிதைந்தாலும்
கற்பிழந்து தமிழ் மானம்
காற்றோடு கலந்தாலும்

படுகுழியில் எம்மைப் போட்டு
படுகொலைதான் புரிந்தாலும்
சுடுகாட்டில் எம்மவர்கள்
எடுபட்டுப் போனாலும்

பொங்குவோம் பொங்குவோம்
தூங்காமல் பொங்குவோம்
பொங்கலும் பொங்குவோம்
நாங்களும் பொங்குவோம்

பொங்கு தமிழ் என்று
சங்கே! நீ முழங்கு
எங்களின் விடிவுக்காய்
எப்போதும் பொங்குவோம்.

# பொங்கலாம் வாங்க! நெருப்பு!



**பொ**ங்கலாம் வாங்க என்றார்
பிடி கையில் நெருப்பு என்றார்
சங்கதி புரிந்து யானும்
சரியென நெருப்பை ஏந்தி
இங்கு வந்துற்று நோக்கின்
எல்லாமே உண்டு ஆனால்
பொங்கிட அடுப்பில்லாது
புகலுவீர் நெருப்பெதுக்கு?

ஆதலால் நெருப்பைக் கொண்டு
அகன்று போய் விடலாமென்றால்
காதலாய் அழைத்த தம்பி
கதிரவன் அழப்பாக்கிறான்
ஊதினால் மட்டுமல்ல
ஓதினால் கூடமூளும்
ஓதியே மூட்டிவிட்ட
உலுத்தலால் அடுப்பிழந்தோம்

கலப்பையின்றிக் காணி உழுது
துடுப்பில்லாது தோணி ஓட்டி
அடுப்பில்லாமல் பொங்கல் செய்யும்
அசகாயசூரர் நாங்கள்
அகப்பையில் பொங்குவோம் - ஆம்
**அகப் பையில்** பொங்குவோம்
புகைப்பது தெரியா வண்ணம்
நங்கனல் பொங்கலாக்கும்

ஆதியில் எங்கிருந்து
அனலிது பிறந்ததையா?
மோதியே மூங்கிலோடு
மூங்கிலின் உரசலாலே


ஊதியே எழுந்ததென்பார்
உறுமியே வெடித்த பொல்லா
எரிமலைக்குழம்பில் நின்று
உதித்ததாம் என்றும் சொல்வார்

இருக்கலாம் சரியென ஏற்கலாம்
ஆனால் எனக்கோர் ஐயம்
அநீதிக்கு ஆளாய்ப்போனோர்
அகப் பையும் அனலைக் கக்கும்

ஏழையின் இரைப்பை காய்ந்தால்
எழுந்திடும் பெரும்நெருப்பு
கணவனைப் பறிகொடுத்த -
கைம்பெண்ணின்
கண்ணீரில் நெருப்பு மூழும் -
கண்ணகி இதற்குச் சான்று
நண்பனே துரோகி ஆகின்
நல்லுளம் நீறு பூக்கும்

பெற்ற வயிறும் பற்றி எரியும்
பெற்ற பிள்ளை எரியும் போது
கற்ற மனது கனன்று எரியும்

கற்ற கல்வி சிதையும் போதும்
குற்றமற்று வாழும் போதும்
சுற்றம் வெறுத்து விலகுமாகில்
பற்றி எரியும் பாச இதயம்
பாரீர்! பாரில் எங்கும் நெருப்பு
இப்படித்தான் நெருப்புப் பிறப்பாச்சோ
என்றும் யான் நினைப்பதுண்டு
ஊரெங்கும் வெள்ளம் பாய
ஓயாது மழை பொழிந்தாலும்
நீர் பொங்கி மனையைத் தாட்டு
நெல்வயல் சிதைத்திட்டாலும்



நீர் பொங்கியாக வேண்டும் -
அன்றேல்
நிலத்திலே பேர் தங்கிடாது தமிழன்
சீர்மிகு நன்றிப் பண்பாட்டை
செகம் அறிந்திடாது போகும் -
ஆதலால்
நீர் பொங்கி மனையைத் தாட்டு
நெல்வயல் சிதைத்திட்டாலும்
நீர் பொங்கி மனையைத் தாட்டு
நெல்வயல் சிதைத்திட்டாலும்
நீர் பொங்கியாக வேண்டும் - தமிழர்
நீர் பொங்கியாக வேண்டும்

வாழ்விடமெங்கும் வெள்ளம்
வட்டைக்குள் விரால்கள் துள்ளும்
பாழ்பட்ட முதலைக்கூட்டம்
பாம்புகள் பயத்தைஊட்டும்
கூழ்முட்டைக்குள்ளிருந்து
குரங்குகள் குஞ்சு காட்டும்
தாழ்வுற்ற தமிழர் வாழ்க்கை
தழைத்திடப் பொங்கவேண்டும்

வயலினிலே கதிர் தலையைக்
குனிந்தால் இன்பம்
வாழ்வினிலே நாம் தலையக்
குனிந்தால் துன்பம்
செயலோடு சிந்தனையும்
சேர்ந்தால் வெற்றி
சிறப்பாகும் நல்லுள்ளங்கள்
வாழ்த்தும் சுற்றி
துயர்மாற்றத் தமிழ் மாந்தர்
செய்யும் பொங்கல்
தோன்றிட வழிவகுக்கும் இத்தைப்
பொங்கல்
அயராது அருந்தமிழர் ஒன்றுகூடி
அணிதிரண்டு பொங்கிடுவோம்
சிந்துபாடி

நெஞ்சுக்குள் நெருப்பிருக்கு
நினைவுக்குள் அடுப்பிருக்கு
பிஞ்சலப் பழம் இருக்கு பிழிந்திட்ட
கரும்பிருக்கு புஞ்சை நெல்
விளைந்திருக்கு
புனலற்ற பாலிருக்கு
அஞ்சாமல் விறகு தூக்கி
அருமையாய்ப் பொங்கல் செய்வோம்

ஆசியாவுக்குள் மட்டுமல்ல -
எங்கள் தேசம்
அகிலத்துக்கே அதிசயம்

மனிதர்களை விதைத்து
எலும்புக் கூடுகளை
அறுவடை செய்வது
எங்கள் தேசம்
பருப்புக்கும் பாணுக்கும்
விலையைக் கூட்டி
நெருப்புக் குழல்களைக்
கொண்டு குவிக்கும்
வீடுகளை எரித்தேனும்
வெளிச்சம் கொடுக்கும்
கையளவு நிலமேனும்
கட்டாயம் வழங்கும்
சொந்த மண்ணைச் சூறையாடி
பின்
போர் முடிந்த பின்னும்
படையணிகளைப் பெருக்கும்
மூச்சை நிறுத்திவிட்டு
பேச்சுச் சுதந்திரம் கொடுக்கும்
நீதியை வீழ்த்தியேனும்
ஆட்சியை உயர்த்தும்
ஊடகவியலாளர்கட்கும்
பாடைகளைப் பரிசளிக்கும்
செத்தவன் கையிலும்
வெற்றிலை கொடுக்கும்
கறுத்தக் கொழும்பானைக் கடித்துக்
கொண்டே
அறுக்கத் தேடும் அம்மாவின்
ஆணிவேரை
ஆண்டுதோறும் மரங்களை நாட்டி
ஆசியாவுக்கே அதிசயமானது
நாட்டிய மரங்களில் நமது
மண்ணில்
அரச மரந்தான் அதிகமானது
போதிமாதவன் சிலைகளைத் தூவி
புனிதமானது எங்கள் தேசம்
சகோதரமொழியாம் தமிழினை
வளர்த்திட
அகோரமாக அனுதினமுழைப்பது
படித்துப் பாருங்கள் திணைக்களப்
பலகைகளை
துடித்துப் போகாவிடில் தூய
பிறப்பில்லை
திணைக்களமென்பது
"திணைக்கலமாகியும்"
கல்வி என்பது "கலவியாய்" மாறியும்
மட்டக்களப்பு "மாட்டுக்கலப்பாகியும்"
புதுக்குடியிருப்பு
"புநுக்குடயிறப்பாகியும்"
யாழ்ப்பாணமென்பது
"யாழ்ப்பணையாகியும்"
முல்லைத்தீவு "முலைத்தில்" வாகியும்
மங்காத தமிழது பொங்கி
வழிகையில்
பொங்காத பொங்கல் பொங்கலோ!
போங்கள்!
அடுப்பிலாது நெருப்பைக்
கொணர்ந்தால்
பொறுப்பிலாமல் நெருப்பது நீளுது -
ஆதலால்
குற்றங்குறையைச் சற்றுப் பொறுத்து
ஒற்றுமையாகி அடுப்பை மூட்டிப்
பக்குவமாய்ப் பொங்கலாம் வாங்க
நெருப்பு அணைந்து நீறாகு முன்னம்
பொறுப்புணர்ந்து பொங்கலாம்
வாங்க!
பொங்கலாம் வாங்க!

**நிலாதமிழின் தாசன்**

## தை நாளே

## தமிழ் பொங்க வருவாய் 2013



அவலங்கள் தீரவும் அபிலாஷை வெல்லவும்
அநீதிகள் மறையும் ஆண்டாக வருவாய்
வரலாற்றை மாற்றும் வஞ்சகர் சூழ்ச்சி
வையத்துள் பொசுக்கவே தாயே நீ அருள்வாய்
பம்மாத்துப் பேச்சும் பலன் இல்லா செயலும்
எம்மாத்தும் இனி இங்கு வேண்டாம்
பறிபோகும் நிலமும் பரம்பரை இனமும்
பாதுகாக்கவே பால் பொங்க வருவாய்
குறைவின்றி எல்லோர்கும் எல்லாம் கிடைத்து
நிறைவான நிம்மதி சமாதானம் தருவாய்
தடையின்றி தமிழர் நாம் தலை நிமிரவே
தை நாளே "தமிழ் பொங்க" வருவாய்
விடிவின்றி தவிக்கும் பூர்வீக குடிகள்
முடிவொன்றை தரும் ஆண்டாய் மிளிர்வாய்



உலகம் சொல்லட்டும் உண்மை வெல்லட்டும்
உரிமை கிடைக்கட்டும் உபத்திரவம் தீரட்டும்
உணர்வு பெருகட்டும் உள்ளம் மகிழட்டும்
உழவன் பொங்கட்டும் உறுதி நிலைக்கட்டும்

-அம்பிளாந்துறையூர் அரியம்-



# அகப்பை

மு. தவராசா

பொங்கு தமிழ் நாளில்
புதுக்குடியிருப் பெனும் புகழ் நிலப்பரப்பில்
தமிழ் பணி தொடரும்
புண்ணிய வான்கள் முன்பாய்த் தலை வணங்கி
சத்தியம் சிவம் சுந்தரமாய் சாந்தமாய்
வந்தமைந்த அரங்கின் கவித்தலைக்கும்
அருகணித்திருக்கும் அன்புக்கவிகட்கும்
அகப்பையை அரங்கேற்ற
அனுமதிக்கு நன்றி சொல்வேன்.

பத்தையும் பறக்க வைக்கும் பசிக்கு பணி செய்யும்
பித்தம் பிடிக்காத
சுத்தமான போராளி அகப்பைக்கு
முடி சூட்டும் வேள்வி இது. முரண்பாடு யாது மில்லை

வேள்வித் தீயினிற்கும் வேண்டும் பொருள் கொடுக்கும்
ஊழித் தேய்வினிலும் உருப்படியாய் உருவாகும்
சன்னதமில்லாமல் சலங்கையும் கட்டாமல்
சிறியதாய் இருந்தாலும் தீர்த்தமது தான் வழங்கும்

அறிவும் திறனுமுள்ளோர் அழகாக ஆக்கி வைத்த
அடுக்களை ஆட்சிக் கோல்
அன்புள்ளோர் கையில்
அகப்பட்டால்
அகப்பேய் ஒழியும் அக-பை மிளிரும்
நாராயண செந்தூரம் நம்மிலே மிகுந்து வரும்



முற்றி முதிர்ந்த தென்னஞ் சிரட்டை அதை
நீரிலே நெகிழ வைத்து தாய்நரம் பெடுத்து
தந்திரமாய்க் கண்திறந்து தரமாகச் செய்தெடுக்கும்
வரமான அகப்பைக்கு பலமாக நன்றி சொல்வோம்

கண்ணிரெண்டை காம்பிலே -
கழுவேற்றினாலும் பழமை மாறாத பண்பான உழைப்பாளி
சூட்டிலும் குளிரிலும் அலுங்காது நனுங்காது
வேலைக்கு கூலி ஏதும் வேண்டி அடம் பிடிக்காது

அகப்பை - குவிக்கும் நிரப்பும் குறைக்கும் பரப்பும்
அவிக்கும் பொரிக்கும் அள்ளியும் தெளிக்கும்
அட்ஷயமானால் அண்டியோருக்கு அமுது வடிக்கும்
ஆயுதமானால் நெற்றியில் ஆணமும் வடிக்கும்

தாழித்த தாச்சியில் கடுகு வெடிக்கும் சீரகம் துடிக்கும்
எண்ணெய் கொதிக்கும் சூடு பறக்கும்
அகப்பை அமைதியாய் தாழிக்கும்
ஆளிதம் கொள்ள அள்ளி எடுக்கும்
முகர்ந்து முகமலர்ந்து மூச்சை எடுப்போம்

செருகல் அகப்பை சோறள்ள வருவானேன்
சொல்வார்கள் உவமை அணி ஓரகப்பை
பாலாலே ஊரெல்லாம் கலியாணம்
விடுவிக்க விடுகதையும் விருப்பமாயுள்ளதுவே

உவமைக்கும் விடுகதைக்கும் உதவுவது மட்டுமல்ல
காம்பை வாட்டி எடுத்தால் வலுவான வைத்தியம்
வியர்த்த முதுகிலே சொறியும் சிறிய நண்பன்
ஆனைக் கண் அகப்பையானால் அழிவு தொடர்ந்து வரும்

பால் பொங்கித் தெளித்தும் பண்பாக
அரிசி எடுத்து பசு நெய்யும் பல பொருளும்
பக்குவமாய் சேர்த் தெடுத்துப் பதமாக
பாகம் பண்ணும் பண்பான படைப்பாளி

கூடிச் சுவைக்கும் குவலையம் தான் தழைக்க
களி மகிழ் வெய்தி கவலைகள் நாம் மறக்க
அகத்திலும் புறத்திலும் அளவெடுத்து உழைக்கின்ற
அகப்பைக்கு சிலையெடுக்க அழைப்பிதழ் தயாரிப்போம்

ஏடெடுத்தோர் ஏரெடுத்தோர் போரடித்தோர் நாடெடுத்தோர்
எல்லோர்க்கும் சொல்லி வைப்போம் அகப்பையே ஆதாரம்
அதன் சுருதி ஏராளம் ஏராளம்.

# பொங்கலாம் வாங்க!

அறுபத்து நான்கு
கலைகளையுமளித்து
பெருக்கெடுத்தோடும்
இன்பங்கள் சேர்க்கும்
கலைமகள் பாதம் கைகூப்பித்
தொழுது
கவியரங்கத்தின்
கட்டவிழ்க்கின்றேன்

உழவர் திருநாளாம்
இவ்விழாவின் தலைவர்
அவர்கட்கும்
பிரதம அதிதிக்கும், சிறப்பு
அதிதிக்கும்,
கவிபடைக்க வந்தமர்ந்த
கவிவாணர் யாவர்க்கும்
புவிவாழச் சொல்லெடுத்து
புதுமைதரும் வல்லோர்க்கும்
நற்கவிகள் பொங்கிவரும்
இவ்வரங்கம் தேடிவந்த
சுவைஞர் அனைவர்க்கும் என்
இதய வணக்கங்கள்!

பொங்கிப் பொங்கி
எழுந்து எழுந்து
தமிழன் சிதைந்து போனான்
எங்கும் வரட்சி எல்லாம் முடிஞ்சி
தமிழ்க்குலம் மெலிஞ்சு போச்சு
பொங்கல் செய்து புத்தாடை
உடுத்தி
பூரிக்கும் நிலையா இங்கிருக்கு
பொங்காத வீடாய்ப்போய் -
எங்கள்
வீடெல்லாம் பொங்காத
வீடாய்ப்போய்

எல்லாச் சனியனொடும் முடங்கிக்
கிடக்கின்ற
காலமல்லவா ஆச்சு
புதிதாக எம்மைப் புதுப்பித்து
சிறப்பிப்போம் வாங்க
இங்கு எவருக்கும் எம்மைப்
புதிதாய்
இணைத்திடும் ஆற்றல் உண்டா?
வாருங்கள் எம்மைப்
புதுப்பிப்போம்
வாழ்வை எந்நாளும்
களித்திருப்போம்
பொங்கலாம் வாங்க!
பாவலர்க்குப் பாவெடுத்து
நாவலர்க்குச் சொல்லெடுத்து
பாசத்தைப் பொழியவைக்க
வந்தது இப்பொங்கல்

காளையரும், கன்னியரும்
கண்டநல் உறவினிலே
காதல் பொழிந்திட வந்தது
இப்பொங்கல்
நாளைவரும் சமூதாயம்
பேதங்கள் போக்கி
நமது தமிழ் வாழ்ந்திடவே வந்தது
இப்பொங்கல்
ஏழையரும் எளியோரும்
இனியில்லை இங்குயென
தோளை நிமிர்த்தி வந்தது
இப்பொங்கல்
காலை வாரிவிட்டு
கடைத்தெருவில்
போய்க்கதைக்கும்
கோழைகள் திருந்திவிட வந்தது
இப்பொங்கல்


பொங்கலாம் வாங்க!
எங்கள் தமிழருக்கு
எங்கெலாம் எழுர்ச்சி தேவையோ
அங்கெலாம் சென்று பொங்கலாம்
வாங்க! - வாழ்வின்
தொங்கலாம் அதையும்
தொட்டுவிட்டோம் - எங்கள்
பங்கெலாம் இன்னும்
கிட்டவில்லை -

தமிழ்ச்
சங்கெலாம் எடுத்து
முழங்கிவிட்டோம்
ஆனால் . . .
கிடைத்தவையெல்லாம்
மங்கலாம் . . . . இதுவரைக்கும்
திங்களாம் ஒளி நமக்கில்லை
தங்கலாம் ஒன்றாய் என்றால்
சாபக்கேடு . . . அதற்கும்
வழியில்லை
இங்கெல்லாம் நாம் ஒன்றானோம்
- இதுபோல்
எங்கெல்லாம் நாங்கள்
உள்ளோமோ
அங்கெல்லாம் பேதங்கள் போக்கி
பொங்கலாம் வாங்க -
கவிப்பொங்கல்
திங்கலாம் வாங்க
தமிழாலும் பொங்கலாம் - நற்
கவியாலும் பொங்கலாம்
எழுத்தெடுத்து சொல்லெடுத்து
இலக்கணவரம்பில்லாத
புதுக்கவிதைப் பொங்கலும்
பொங்கலாம்!



இன்னும் ஒரு பொங்கல்
பழம்பெரும் பொங்கல் மரபுப் பொங்கல்
எழுத்தென்னும் பானை வைத்து
அசை என்னும் பாலூற்றி
சீர் எனும் நெருப்பெடுத்து
தளை என்னும் அகப்பையிலே
அடி என்னும் அரிசி போட்டு
தொடை என்னும் சர்க்கரை சேர்த்து
பொங்கலாம் - மரபுக் கவிதை
பொங்கலும் பொங்கலாம் வாங்க
உழவர் திருநாள் என்று
உலகமெலாம் போற்றும்
தைத்திருநாள் வந்திட்டால்
வைத்திருக்கும் அன்பையெல்லாம்
பொங்கலாம்
ஆனந்தம் அடையலாம்
பூரித்துச் செழித்து
பொங்கலில் மலர்ந்திட
புதுக்குடியிருப்பில் பொன்னான
திருவிழா
மின்னாமல் முழங்காமல் வருகின்ற
மழைபோல்
சட்டென்று வந்த பொங்கல்
தமிழ் வாழ வந்த பொங்கல்

- அக்கரைப்பாக்கியன் -



# பால் கொண்டு வந்தேன்

புதுமைவாணன் - பாண்டிருப்பு



வாய்க்கால் நிறைத்து
வயற்காடு உழுதவர்க்கு
வருடத்தில் ஒரு விழா - இது
வாகை சூடும் பெருவிழா

கலப்பை கைபிடித்து - நம்
இரைப்பை நிறைத்தவனுக்கு
ஏர்பிடிக்கும் உழவனுக்கு
தேர் பிடிக்க வாரீர்

வள்ளுவன் வளர்த்த தமிழே - பெரும்
வள்ளல்கள் வார்த்த தமிழே
ஔவை ஆக்கித் தந்த தமிழே - பாரதி
எமை நோக்கித் தந்த தமிழே

உனைத் தாழ் பணிகின்றேன் - என்றும்
உனைத் தலை வணங்குகின்றேன்

எழுத்தால் எழுந்து நிற்கும்
எம்முன் வீற்றிருக்கும்
பல கவி படைத்த நல்
புலமை மிகு கவிஞர்களே

மூத்த எழுத்தாளர் பெருமக்களே
முட்டி முளைக்க முயற்சித்து
முளைவிட்டிருக்கும் இத்துளிரின்
முகமலர்ந்த வணக்கங்கள்

பார் புகழும் பாவாணராய்
பட்டம் பல பெற்று
சீர் தவழும் சிறப்போடும்
சட்டெனும் சிரிப்போடும்

அரங்கைத் தலைமை தாங்கும்
சுரங்கப் புலமை ஓங்கும்
சக்கரைக் கவிஞர் - எங்கள்
அக்கரைப்பாக்கியரே!

அவைதனைத் தலைமை தாங்கும்
சுவை தரும் கலைமிகு கதிரவனே!
அவை நிறை காட்சி தந்து
ஆதரவு தரும் ஆர்வலர்களே!

என்னோடு கவிபாட
எழுதிய துணிவோடு
எடுத்துவந்த கவியோடு
கவிபாடும் கவிஞர்களே!

அத்தனை பேருக்கும் தமிழ்
அர்த்தமுள்ள வந்தனங்கள்

கடல்போல் நிறைந்திருக்கும்
காற்றாய்க் கலந்திருக்கும்
அன்னைத் தமிழில் - நான்
அள்ளிய துளி வெறும் கடுகே!

அதனால்தான் அஞ்சுகின்றேன்
அசை தேடி இசைபோட்ட கவியில்
ஆங்காங்கே பிழையிருக்கும் -
அவையே!
அன்போடு என்பிழை பொறுத்திடுக

**"பொங்கலாம் வாங்க"** என
மக்கல நாளில் நல்
பால்கொண்டு வரும்படியே
புதுக்குடியிருப்பு எனையழைக்க

அன்பால் அடியெடுத்து - தமிழ்
பண்பால் கவிதொடுத்து
ஒண்பால் சுவையெடுத்து
ஓடோடிப் பால்கொண்டு வந்தேன் -
நான்
உடைமை நாடிப் பால்கொண்டுவந்தேன்

வயிறு நிறைத்த உழவனுக்கு
வயற்காடு மிதித்த பசுவுக்கு
வான்மழை காத்த பகலவனுக்கு
பாசத்தோடு பால்கொண்டு வந்தேன் -
நான்
நேசத்தோடு பால்கொண்டு வந்தேன்

தவிதவிப்பால் தத்தளிக்கும்
தமிழர் சமுதாயம் செழிக்க
எங்கள் உளமெல்லாம் விழிக்க
அலைந்து பால்கொண்டு வந்தேன் -
நான்
நேசத்தோடு பால்கொண்டு வந்தேன்

தொலைக்காட்சி நிகழ்ச்சியில்
தொலைகிறது கலாசாரம் - அது
தொடரவிடாமல் தடுக்கவே
கலைதரும் பால்கொண்டு வந்தேன் -
நான்
தொலைதூரம் பால்கொண்டு
வந்தேன்

சினிமாத்திரைகள் ஓட
சிற்றின்பக் காட்சி தேடி
சீரழியும் சமுதாயம் மீள
சிரிப்போடு பால்கொண்டு வந்தேன் -
நான்
சிறப்போடு பால்கொண்டு வந்தேன்

பண்டிகை நாளிதில் - எம்
பண்பாட்டை மீட்டெடுக்க
பாடுபட்டுப் பாலெடுத்தே
தன்பாட்டில் பால்கொண்டு வந்தேன் -
நான்
என்பாட்டில் கொண்டு வந்தேன்

உண்டது மாதா தந்த பால் - நான்
கொண்டு வந்ததோ கோமாதா தந்த பால்

பண்போடு கொண்டு வந்த
பால்தனைப் பொங்கிடுவோம்
பட்டாசு ஓசை போல் - தினம்
சிரித்து மகிழ்ந்திடுவோம்

என்பால் பொங்கட்டும் - உங்கள்
அன்பால் பொங்கட்டும்
உழைப்பால் பொங்கட்டும் - உயிர்கள்
அழைப்பால் பொங்கட்டும்

பட்டி தொட்டி சுற்றி வந்தேன்
பால் கொண்டு கவிதந்தேன்
பொங்கிட உழமகிழ்ந்தேன் - நான்
தங்கிடத் தமிழ் கேட்டேன்

பொறுத்திருந்து கவிகேட்டு
பொங்கல் உண்ணக் காத்திருக்கும்
செவிகட்டு விடைகொடுத்து
காத்திருக்கும் கவிஞர்க்கு
இடம் கொடுத்து விடைபெறுகின்றேன்
இந் நன்றியை விருந்தாக்குகின்றேன்.

---

## அவையோர் பொங்கல்




ஆக்கியோன் - சின்னத்தம்பி

பொஙகலாம் வாங்க
பொலிவோடு வாங்க
திங்களில் பொங்க திரளோடு வாங்க
உங்களின் பொங்கல்
உளருசிப் பொங்கல்
மங்கலப் பொங்கலை
மனமோடு பொங்க வாங்க

செங்கதிர் தோன்றி சிறப்போடு மலர
கதிரவன் கலை பல நறுமணம் கமழ
கவிஞனின் கனவில்
கலை பல உலவ
மணிப்புறாவாக மகிழலாம் வாங்க

சஞ்சிகைப் பொங்கல்
சலிப்பில்லாப் பொங்கலை
நெஞ்செல்லாம் பொங்க
நினைவான பொங்கல்
பஞ்சமில் பொங்கல்
பாவா (ண)ல பொங்கல்
கெஞ்சினால் கேட்கக்
காணாத பொங்கல்

விருப்பொடு பொங்கும்
விளைநிலப் பொங்கல்
நெருப்பொடு கலை
உருப்படப் பொங்கல்
அடுப்பிலாப் பொங்கல்
அதிசயப் பொங்கல்
உருப்படு பொங்கல்
உழவரின் பொங்கல்

அகப்பைப் பொங்கல்
அறிவுசால் பொங்கல்
நினைப்பைப் பொங்க
நீங்களும் வாங்க
விதைப்பைப் பொங்கலாம்
விளைவைப் பொங்கலாம்
உழைப்பால் பொங்கினால்
உளமாற உண்ணலாம்

# பொங்கலாம் வாங்க



மண்டூர் அசோகா

சேற்றில் இறங்கி
சளைக்காமல் போராடி
நாமுண்ணும்
சோற்றுக்கு வழிகாட்டும்
உழவர் திருநாள்
மழையும் வெயிலும் மறக்காமல்
தந்துதவி
உழவன் விதைத்த நெல்விளைய
உதவுகின்ற சூரியனின்
உதவிக்கு நன்றி சொல்லும்
இன்பத்திருநாள்

புதுப்பானை அடுப்பேற்றி
விறகெரித்து
பால்பொங்க பச்சரிசியிட்டு
சர்க்கரை, பயறு, பழங்கள் சேர்த்து
பொங்கிப் படைப்போம்
பகலவனைப் போற்றிப் படைத்த பின்
அதிகாலை வேளையிலே
நாமுண்ணும் பொங்கலுக்கு
அதிகம் சுவைதான்
என்றாலும்
அந்தச் சுவையை
நான் கொண்டு வந்த
இந்தச் சர்க்கரை கொடுத்திடுமா?
இல்லையென்றால்
பொறுத்திடுங்கள் என்னை

இனிப்புக்கும் சுவைக்கும்
எடுப்பாக முன்னிற்கும் சர்க்கரை
எல்லோர் நாவிலும்
இனித்திடும்தான்
எந்த உணவும்
சர்க்கரை இல்லையென்றால்
சுவைக்காது உண்மைதான்
ஆனால்
இந்தச் சர்க்கரையே
மனித உடலை உருக்குலைத்து
உயிருக்கு வேட்டு வைக்கும்
பொல்லாத நோய்க்கும்
பெயராகப் போயிற்று
மனிதக் குருதியில்
சர்க்கரையின் அளவு கூடிவிட்டால்
சாவுக்கும் வழிவகுக்கும்
ஆதலினால்

நம் பொங்கலிலே
இந்தச் சர்க்கரையின் சுவையைக் கொஞ்சம்
குறைத்து வைப்போம்

தைப்பொங்கல் பொங்கு முன்னர்
எங்கள் திருநாட்டில்
அடைமழை வெள்ளம் பொங்கியது
ஆறுகள், குளங்கள், ஏரிகள் பொங்கின
விளை நிலங்களும்
விதைத்த பயிர்களும்
பொங்கிய வெள்ளத்தில்
புதைந்து போயின
ஆற்று வெள்ளம்
மனித உடல்களை
அடித்துச் சென்றது
ஏழையின் குடிசைகளை
இரக்கமின்றி புரட்டிப் போட்டது

இன்று
மழை ஓய்ந்தது
பொங்கிய வெள்ளமும்
போயிற்று கடல் தேடி
வீடும் தொழிலும்
தொலைத்தவர் வாழ்வில்
சர்க்கரைப் பொங்கல்
சரிப்பட்டு வருமா?
உள்ளங்கள் கொதிக்கும்
வேதனை பொங்கும்
வேறென்ன அங்கே
விளைந்திட முடியும்

பொங்கலுக்குச் சுவை சேர்க்கும்
சர்க்கரையைப் போல
பெண்கள்தான் வாழ்க்கைக்கே
ஆதார சக்திகள்
இந்த வாழ்க்கை சுவைப்பதும்
வளமாய் அமைவதும்
பெண்மையால்த்தானே
ஆனால் இன்றோ
அந்தப் பெண்மையே
துன்பத்தில் அல்லவா
சுருண்டு கிடக்குது
அரும்பிலே கிள்ளி
அக்கினியில் போட்டு
பருவத்தே கிள்ளி பாதையில் வீசி . . .
செவியுற்றதெல்லாம் சோகங்கள்
அறிந்தவையெல்லாம்
அடக்குமுறைகள்
அதனால் இந்த
இரண்டாயிரத்துப் பதின்மூன்றின் பொங்கல்
இனிக்காது அதிலே
சுவையும் இருக்காது

தந்தையாய்த் தமையனாய்
தலை தடவிச் சீராட்டும் தாத்தாவாய்
மாமனாய், சிறிய தந்தையாய்
வார்த்தைகளில்
சர்க்கரையின் பாகுச் சுவையைச் சொட்டி
பால்மணம் மாறா
பச்சைக் குழந்தைகளை
தங்கள் ஆசைத்தீ அணைக்க
அசிங்கப்படுத்துகின்ற
ஈனத்தனங்களை
எவரிடத்துச் சொல்லி அழ

எங்கள் தேசத்தின்
ஏழைக்குடிசையின்
இளங்குருத்தொன்று
கனவுகளைச் சுமந்து
கடல் கடந்து போயிற்று
பதினேழு வயதின் பருவக்
கனவுகளை
வறுமைக்குள் புதைத்துவிட்டு
உழைத்துப் பணந்தேட
உயரப்பறந்தது
எதிர்காலம் இனித்திருக்கும்
என்றெண்ணி
சாக்கடைக்குள் வீழ்ந்ததந்த ரோஜா
மொட்டு
ஏழு ஆண்டுகள்
மொழியறியா மனிதர்கள் மத்தியிலே
இதயம் நொருங்கிச் சிதைய
தாய்நாடு, தாயன்பு
தந்தை, சகோதரர்கள்
இந்த நினைவே
உயிர் மூச்சாய் சுடு நெருப்பாய் . . .
சிரச்சேதமாகி
சிதறுண்டு போனதங்கே

ஆசை மகள் உழைப்பில்
வறுமையைத் துரத்தலாம் என்று
வளர்த்த கனவுகளை
சிதைத்தவளும் ஒரு தாய்தான்
இங்கே செத்தைக் குடிசையிலே
இந்த ஏழைத்தாய்
கண்ணீரில் மிதக்க
அங்கே மாளிகையில் வாழும்
அவளுக்கு மட்டும்
வாழ்க்கை இனித்திடுமா?
மனச்சாட்சி அவளின்
மனதைக் குடையாதா?

நேற்று வரையும்
செய்திகளில் எல்லாம்
துயரமே பொங்கியது
அதனால்
நிம்மதியெல்லாம்
தொலைந்து போனது
இன்றுபோய்
நாளை வரும் நாளிலாவது
நல்லவை நடக்கட்டும்
அடுத்துவரும் பொங்கலை
அமுதாய்ப் படைப்போம்
அதுவரையும் பொறுத்திருங்கள்

# உங்களுக்குத் தெரியுமா?

**உலக கவிதை தினம் : ?**

# பொங்கலாம் வாங்க புது நிகழ்வு கண்டேன்

மங்காத புகழ்பூத்த மட்டு
மாநகரிலே
பொங்கலாம் வாங்க புது
நிகழ்வொன்று
பூரித்து நின்றேன்
புதுப்பொலிவுடனே
வங்கக் கரையோரம் மகிழ்வோடு
அமைந்திருக்கும்
சிங்க மணித்திருநாடாம் செல்வமிகு
புதுக்குடியிருப்பெனும் பேர் பெருகும்
பழம் பதியில்
சிறப்பான கவியரங்கு காட்சி
கண்டேன்

அன்பான தமிழ் மொழியில்
அதிரசமூட்டி
பொங்கலாம் வாங்க புதுநிகழ்வு
அன்று
செங்கதிரும், கதிரவனும் சிறப்பான
மணிப்புறாவும்
சீரான அடுப்பு வைத்த கவிஞனவன்
பண்பான பானை வைத்து
பாலுமூற்றி
பசுமை பொங்கும் பச்சரிசி
தானுமிட்டு

பொங்கலாம் வாங்க
புதுச்சுவையேற்றி
நெஞ்சைத்தான் நிமிர்த்தி
நெருப்புமிட்டு
அச்சமிலா காலமதில்
அமிர்தமெனும் பொங்கலினை
அகப்பையிட்டு அதிரசத்தைத்தான்
கலக்கி
அன்பான கவிஞர்குழாம்
அன்று அங்கு
தித்திக்கும் சுவையூட்ட செல்வமிகு
சர்க்கரையை
சீராகத்தான் கலக்கி விட்டார்
பொங்கலிலே

தேன்சொட்டு பொங்கலினை
திக்கு பல
திசையெல்லாம் வீற்றிருந்த
சிங்கத் தமிழருக்கு சீராக
அள்ளியீந்தார்
சிறப்பான கவிஞர் குழாம்

கண்டேன் பெரும் காட்சி
காலமெல்லாம் மறக்கவொணா
என்றும் என் நெஞ்சில் எழிலாக
வீற்றிருக்கும் இந்நிகழ்வு

ஊற்று நீரான்
கலைமணி கலாபூஷணம் **மா.கந்தசாமி**

- நீலாபாலன் -

படித்தவர்களால் அல்லது அறிவு ஜீவிகளால் மட்டுமே அடைகாத்து வைக்கப்படும் கவிதைகள் படைப்பாளனை உச்சாரத்திற்கு உயர்த்தலாம். ஆனால் அந்தப் படைப்புக்கள் மக்களைச் சென்றடையாது கவிதா வாசகளை ஈர்க்காது. மக்களிடம் போய்ச் சேராத கவிதைகள் பிறப்பதில் பிறந்ததில் என்ன பயன்.

நாலுபேர் வாசித்து ஆறுபேர் சேர்ந்திருந்து பேசாத விமர்சிக்காத படைப்புக்களின் பிறப்பே வீண் முயற்சிதான் இல்லையா? ....

பாரதிக்குப் பின்னர்தான் கவிதையை மிகச் சாதாரணனட தரிசித்தால் கிளிப்பாட்டும் குயிற்பாட்டும் பாரதியின் கண்ணம்மாவும் கண்ணனுதான் கவிதையைப் பாமரன் வாழும் குடிசைக்கு கொண்டுவந்தது. அறிமுகப்படுத்தியது. புரியாத புரிந்துகொள்ள முடியாத பொங்கற் சோறுகள் அது பொற்கலத்தில் வைத்து பந்திவைக்கப்பட்டாலும் நல்ல வாசகனைத் தோற்றுவிடும்.

நல்ல கவிதை . . . சமூகத்தைப் பார்க்கும் கண்ணாடி அது காலத்தின் முகம் காட்டும் ஜன்னல். ஏனெனில் கவிஞனின் சமூக அனுபவ வெளிப்பாடுகளே கவிதைகள். கருத்துக்களைத் திணித்து சொற்களால் முடிச்சுப் போட்டு தயாரிக்கப்படுவதல்ல கவிதை.

கவிதை முழுக்கக் குவிந்திருப்பவை உணர்ச்சியின் கூட்டங்கள்தான் உணர்ச்சியின் எச்சங்களும், உணர்வின் துப்பல்களுந்தானே. கவிதை உருப்படிகள்.

அடிமன ஆழ்மன உதறல்களின் சிதறல்களாகவும் அதன் சாயல்களாகவும் நிழற்கோடுகளாகவும் புறக்கோட்டுருவங்களாகவும் கவிதை வரக் காரணம் கவிஞனது ஆய்வகழ்வுப் பார்வையும் பதிவுணர்வுமே.

இப்பொழுது கற்பனை விமானமேறி அலைந்து நுழைந்து கால் கடுக்கக் கடந்து கவிதைகளாக கண்டெடுத்துத் தரும் கவிதைக் கம்பியூட்டர்களை ஆசை, அற்புதங்களைக் கண்டு வருகின்றோம். பச்சை பச்சையாகக் கொட்டப்படும் இச்சை எதிர்பார்ப்புக்களையும் பார்த்து வருகின்றோம்.

நேற்றுவரை கவிதைகளாக வராத அல்லது கவிதைகளுக்கு உள்ளடக்கப்படாத நிகழ்வுகள் அவை நிகழும் புலன்கள் களங்கள் கவிதை சாம்ராஸ்யத்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட எதார்த்தங்கள் அர்த்தம் சுமந்த கோபங்கள் இந்தச் சமூக அமைப்பை மாற்றி விடுவதற்கான போராட்டங்கள் உயிரோடும், உணர்வோடும், அன்றாடம் உலை ஏறாத அடுப்போடும் வாழும் உழைப்பாளர்களது துயரங்கள் கவிஞர்களது பாடுபொருளாக வந்தால் கவிதை மீண்டும் ஒருமுறை பட்டமளிப்பு நடந்ததா என்ன?

உருவ வேறுபாடுகளைக் கொண்டு கவிதையை வகை பிரித்தனர்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்...: என்பது போன்ற வெண்பா, விருத்தப்பா, வஞ்சிப்பா, கலிப்பா அகவலென, கட்டுப்பாடு,

கட்டமைதி ஓசைச் சிறப்பு, உள்ளடக்கம் உள்ளவை மரபுக்கவிதைகள், மரபை மீறிவருவதெல்லாம் வசனங்கள் என்று, அன்று வகை பிரிக்கப்பட்டன.

மரபுக் கவிதைகள்... ஐவகை இலக்கணங்களோடும், உவமை உருவகக்களோடும், மிகச்சாதாரணனும் புரிந்து கொள்ளும்படி மினுங்கின. சம்பவப் பின்னல்களோடும், படிமம், குறியீட்டு உத்திகளோடும், கனதியான கருத்துகளைப் பூசிக்கொண்டும் அவை வெளிப்பட்டன.

பொருள் சார்ந்த, உள்ளடக்கப் பருமனுள்ள கவிதைள் வடிவ அமைப்புகளின்றி வந்து போயின:- அவற்றை புதியனவென்றார்கள் ஆய்வாளர்கள்.

இன்னும், கிராமத்தின் புன்னகையாய் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும், வாய்மொழி இலக்கியமாம் நாட்டார் பாடல் வடிவிலும், கவிதைகளை வனைகிற முயற்சியும், மேலும் கவிதையின் இறுக்கத்தைத் தளர்த்தி இலகுபடுத்தும் ஆர்வமும்கூட முனைப்பாக முன்னெடுக்கப்பட்டது. அறுகம் புல் பேசியதும், அரளிப்பூ பாடியதும், வாழைமரம் சூளுரைத்ததும், கவிதையின் வளர்ச்சி முனைப்புகளே.

நமது மண்ணில் தேசிய இலக்கியவாதம் மண்வாசனை இலக்கிய மோகம் வலுப்பெற்றிருந்த காலகட்டத்திற்றான்.... புதுக்கவிதை ஆக்க முயற்சியில் ஈழத்துக் கவிதையாளர்கள் ஈடுபாடு காட்டத் தொடங்கினர். வெறும் சொற்புணர்ச்சியாக, புரியாத விடயங்களை யெல்லாம் உள்ளடக்கிய சொற்சேர்க்கைகளாக.... மொழிபெயர்ப்புக் கவிதைகள்போல, அவை... அந்த... ஆரம்பநாட்களில் முகங்காட்டியதால்.. மூத்தகவிஞர்கள் சிலர் முணுமுணுத்தனர். எழுபதுகளில், பல நல்ல இளம் கவிஞர்கள் புதுக்கவிதையின்பால் ஈடுபாடு காட்டத் தொடங்கினர்.

மரபுக் கவிதை வரைவாளர்கள் . . . புதுக்கவிதை எழுதத் தொடங்கியதால் புரியாத சொற்களைக் கொண்டு கவிதை பின்னிக்கொண்டிருந்த . . . விசயம் புரியாத புதுக்கவிதைக்காரர்கள் சிலர் . . . பறுபுறுத்துக்கொண்டே நழுவத்தொடங்கினர். இந்தியாவில் இருந்த பிறந்த புதுக்கவிதையை இலங்கைக் கவிதைகள் விழுங்கத் தொடங்கின. இலக்கணம் மீறிய இதய வார்ப்புக்களே புதுக்கவிதைகள் என்று எம்மவர்கள் புதுக்கவிதைக்கோர் புத்திலக்கணம் வகுத்தனர், வளப்படுத்தினர்.

படிமப் பாஷைகளை கவிதைக்குள் நுழைத்ததும் படிமப் பாஷையே கவிதைப் பாஷையாக்கித் தந்தும் இலங்கைக் கவிதைகளால் புதிய கவிதை வளம் பெற்றது.

> "கந்தையானாலும் கழுவிக்கட்டு என்பவரே
> கந்தையைக் கழுவத்தான் வேண்டும், ... கழுவலாம்
> அது காயும் வரை எதை நாம் கட்டிக்கொள்வோம்."

என்பது போன்ற உருவ உள்ளடக்கப் பருமனுள்ள கவிதைகளை எங்கள் கவிஞர்கள் வீரியத்தோடு ஆக்கிக் கொடுத்தனர். புதுக் கவிதை புரியும் மொழிக் கவிதையாக உருமாறத் தொடங்கின.

**அடுத்த இதழில் தொடரும்.....**

# பொங்கலின் விடியலை தேடி

நமக்கான ஓர் பொங்கல்
புதிதாக பொங்கப்போகிறது

நம்பிக்கை எனும்
பொங்கலாய்
ஓர் திங்கள்
நமக்குக் கிடைக்கப்
போகிறது

எதிரும் புதிருமாக
இருந்து
எதுவும்
சாதிக்க முடியாது
கொஞ்சம் விட்டு கொடுத்து
செய்தால்
கொஞ்சம் அரிசியாவது
கிடைக்கும்

வெறும் பானையை
அடுப்பில்
வைத்து விட்டு
நீயும் நானும் போராடினால்
வெற்று பானைதான்
தனலில்
கறுத்துப் போகப் போகிறாது

தனித்தே பொங்கப் போன
எல்லாம்
நடுத்தெருவில்
தூரத்துத் தென்னை மரமாக
ஓரம் கட்டிவிட்டனர்

நடுத்தெருவில்
சனங்களுக்கு
பொங்கலுமில்லை
ஒரு வேளை
சோறுமில்லை

நமக்குள் பிரதேச பிரிவு
எதற்கு
நாம் பிரிந்தால்
நாலுசந்தியிலும்
ஓர் மரம் வளரும்
புரியுதா?

பொங்கல் பொங்கட்டும்
எனது பானையில்
உனது அரிசியும், நீரும்
நமது
ஆணவங்கள்
நல்ல விறகாய் எரிப்போம்

எதிரியிடமாவது
கொஞ்சம் சக்கரை
கேட்போம்

துரோகியிடம்
அள்ளிப் போட
அகப்பையும் வேண்டாம்
பருப்பும் வேண்டாம்

குழந்தைகளின் கனவுகளை
கண்களில் சந்தோசம் காண
பசும் பால் அதிகமாக
ஊற்றி
மீண்டுமொரு
பொங்கலை பொங்கச் செய்வோம்

இரத்தங்கள் பொங்கிய
கால வெளி வேண்டாம்
இரத்த வெறியில் வளரும்
பயிர்ச் செய்கையும் வேண்டாம்

கிழக்கே பொங்குவோம்
வடக்கே வாழையிலை இட்டு
வணங்கி
மலையகத்தில் மனதார
சாப்பிட்டு
தலைநகரத்தில் தீபம் காட்டி
தெற்கே
பொங்கலைக் கொடுத்து
விருந்தோம்பலை
காட்டுவோம்

புதுப் பொங்கலின்
விடியலைத் தேடுவோம்.

* * *

எஸ். பி. பாலமுருகன்

# பானை

சிந்ரா



என்பானை வெறுமையாய்
கிடக்கிறது . . .
அரிசி, சர்க்கரை
அகப்பை, நெருப்பு, பால்
அனைத்தும் இருந்தும் ஏன்
எம் பானை வெறுமையாய்க்
கிடக்கின்றது.

தமிழர் வெறுமைக்கும்
தைப்பொங்கலுக்கும்
சம்பந்தம் இருக்கிறதா?
மலர்ந்துவிட்ட தமிழ் மகளே!
கொஞ்சம் நில் - உன்னோடு
இந்தக் கவிமகன்
சண்டையிடப்போகிறேன்

தத்துவங்களோடு பிறப்பவள்
நீயல்லவா?
முதலில் என் வினாக்களுக்கு
விடை சொல்லிப் போ . . .

பண்பாடு தெரிந்தவள் நீயல்லவா
என் பார்வைக்குக் கொஞ்சம்
பதில் சொல்லிவிட்டுப் போ . . .

தைபிறந்தால் வழிபிறக்கும் என்றே
எம் முன்னோர் சொன்னார்கள்
பன்னிருமாதம் உன்னைக்
காலக்கருவறையில்
சுமந்து பிரசவித்த போதும்
பெற்றெடுத்த சந்தோசம்
எமக்கில்லையே

முன்பெல்லாம் தமிழ்மக்கள்
முழுநிலவாக ஜொலித்ததாக
என் அப்பன், அம்மை
சொன்னார்கள்
எங்கள் காலத்தில் ஏன்
இப்படி குறைமாதக் குழந்தையாய்
பிறந்து கிடக்கிறாய் . . . !

அவர்கள் இன்னும் எவ்வளவோ
சொன்னார்கள்
தித்திக்கும் பொங்கல் என்றார்கள்
தமிழ் வீரம் பேசும் ஜல்லிக்கட்டு
என்றார்கள்



விடிய விடிய கூத்தாட்டம் என்றார்கள்
கும்மி, கோலோடு களியாட்டம்
என்றார்கள்
உறவினர் சேர்ந்திருந்த திருவிழா
என்றார்கள்

இப்பொழுதெல்லாம்
ஏன் எமக்கு அந்த சந்தோசங்களை
நீ தருவதில்லை - தைமகளே
உன்பிறப்பில் எனக்கு

சந்தேகம் இருக்கின்றது . . .!
உழவர் திருநாள் என்றே
உசத்தியாய் சொல்கின்றோம் -
உலகத்தில்
உயர்ந்தவன் உழவன்
என்கின்றோம்
ஆனால் - உழவன் வாழ்வுதான்
உயர்வே இல்லையே!

ஏர்பூட்டி உழுத காலம் மலையேறிப்
போச்சே . . .
எந்திரங்கள் பாவனைகள் கூடிப்
போச்சே . . .
இன்று விதைத்தவனும்
உயரவில்லை
அன்று வேளாண்மை
வெட்டியவனுக்கும்
இன்று வேலையில்லை
அவர்களின் அடுப்போ
வெறுமையாய்
கிடக்கிறது - சூடடிக்கும் எந்திரமோ
சுருட்டிக் கொண்டு போகிறது

விலைவாசி கூடிப்போச்சு - இன்னும்
விடியாத தேசமாச்சு
கலாசாரம் மாறிப்போச்சு
காசேதான் கடவுளாச்சி

தைமகளே உனக்கு புத்தாடை
அணிவிக்க விருப்பமில்லை
தன் குழந்தைகளுக்கு புத்தாடை
எடுக்கத் திண்டாடும் அப்பன்களும்
புதுவாழ்வைத் தொடங்க முடியாமல்
திண்டாடும் அம்மைகளும்
பண்டிகை நாளில் பட்டினி கிடக்கும்
குழந்தைகளும் எம் தேசத்தில்
இன்னும் இருக்கிறார்கள்
மன்னித்துவிடு தைமகளே
இப்படியிருக்கையில்
உனக்கும் எனக்கும் புத்தாடை
தேவைதானா?

தமிழர் திருநாள் என்றே உன்னைத்
தலையில் தூக்கி வைத்துக்
கொள்கின்றோம்
நாங்கள் - எம் தமிழர்
வாழ்வைப் பார்த்தாயா
அக்கினிப் பறவைகளையும்
அண்ணாந்து பார்த்தவர்கள்
நாங்கள்

இன்றோ - குனிந்த தலைகளோடு
கூனி நடக்கின்றோம்
அரசியல் அநாதைகளாய்
அலைந்து திரிகின்றோம்

தமிழர் கல்வியைப் பார் தைமகளே
உலக அறிவியலுக்கே
நதி மூலம் காட்டியவர்கள் நாங்கள்
இன்றைய எம் இளசுகளைப் பார்

தொலைக்காட்சியிலும்
தொலைபேசியிலும்
எம் கல்வியைத் தொலைப்பதை
எம் தமிழர் பண்பாட்டைப் பார் தமிழ் மகளே!
மாக்கோலம் மறந்து போனோம் - அதில்
மின்னும் மனித நேயம் தொலைந்து போனோம்
ஊடகங்களிலும், இலக்கிய மேடைகளிலுமே
உனக்கு உயிர் வளர்க்கிறோம்

போர் நடந்தது புயல் அடித்தது
பேரலை வந்து வெள்ளம் வந்தது
வேதனை வந்தது சோதனை வந்தது
மீண்டும் மீண்டும் எழுகின்றோம்
மீட்சிதான் வரவில்லையே . . .

தைமகளே - நீ என்னை நிந்திப்பாய்
வசை பாடும் வஞ்சகக் கவிஞனென்பாய்
நான் என்ன செய்ய - உன்னோடு
சண்டையிட எனக்கு உரிமை இருக்கிறது
தமிழ் மகன் என்ற தகுதி இருக்கிறது
உழவர் மகன் என்ற
உரித்தும் இருக்கிறது

தைமகளே - எம் தமிழர்க்கு
தலைநிமிர்வைத் தா
இடப்பெயர்வு இல்லாத
இருப்பைத் தா
பட்டினி இல்லாத நாட்கள் தா
பறந்து திரிய சுதந்திர வானம் தா

உழவர் வாழ்வில் உயர்வைத் தா
உழைப்புக்கேற்ற ஊதியம் தா
சரிநிகர் பேணும் தனித்துவம் தா
சாதிகள் இல்லாத சமூகம் தா

விழிகளில் எப்போதும்
நெருப்பைத்தா
வழிகளில் எப்போதும் வசந்தம் தா
தாய் மொழி ஓங்க திருவருள் தா
எம் தமிழ்க் கலை ஓங்கத்
தகவினைத் தா

பிரதேசம் பார்க்காத சமூகம் தா
இனவாதம் இல்லாத
இலங்கையைத் தா
மதவாதம் இல்லாத மனிதரைத் தா
ஒடுக்கப்பட்டார் வாழ்வில்
ஒளியைத் தா

எம்வாழ்வில் வசந்தம் கொண்டு வா
அடுத்த பொங்கலில் - உனக்கு
ஆராத்தீ எடுக்கின்றேன்
நிலையான சந்தோசம்
கொண்டு வா
அலங்கார வார்த்தைகளால்
உன்னை அபிஷேகம்
செய்கின்றேன் . . . !

தைமகளே அதுவரைக்கும்
பொறுத்திரு . . .!

* * *

‘செங்கதிர்’, ‘கதிரவன்’, ‘மணிப்புறா’ ஆகிய சிற்றிதழ்கள் இணைந்து 14.01.2013 அன்று மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய மண்டபத்தில் **‘பொங்கலாம் வாங்க’** சிறப்புக் கவியரங்கம் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட செங்கதிரோன் த.கோபாலக்கிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய பிரதம அதிதி உரை (கவிதை)

# பொங்கலாம் வாங்க...

தலைவர்க்கும் - தகைமைசால்
பெரியோர்க்கும்
அவையோர்க்கும் - என்
அன்பு வணக்கங்கள்! பொங்கல்
வாழ்த்துக்கள்!!

அக்கரைப்பாக்கியன் தலைமையில்
அரங்கில்
சர்க்கரை நிகர்த்த
தமிழ்ப் பொங்கல் கண்டோம்
பானை சிந்ரா ஏற்றினார்
பானை வெறுமைதான் - ஆனாலும்
இவர் கவிதை ஓர்நாள் - தமிழன்
கடனை நிமிர்த்தும் ! நிச்சயம் !!

‘பாலைப்’ பொழிந்தார்
புதுமைவாணன்
பார்க்கப் பால் முகம் - ஆனால்
பாய்ந்தால் வேங்கை

நிலாதமிழன் தாசன் ‘நெருப்பை
மூட்டினார்’
நிலா குளிர்மை - ஆனால்
அவர் கவிதை நெருப்பு
‘அகப்பையை’ ஏந்திய தவராசா
எப்போதும்
அனைவரும் பொங்கவும் அகிலம்
செழிக்கவும்
அகப் பையில் நினைப்பார் -
அதனால்
அள்ளி அள்ளிக் கவிதை ஈந்தார்

'அரிசியை' இட்டார் துஷ்யந்தன் -
சமூகக்
கரிசனையோடு கவிதை படைத்தார்
இறுதியில் பொங்கல் இனிக்கப்
போட்டார் 'சர்க்கரை'
மங்கைக் கவிஞர் மண்டூர் அசோகா
கடல் பொங்குமாற்போல்
கவிபொங்கி அமர்ந்துள்ள
கவிஞர்கள் அனைவருக்கும்
'கதிரவன்' ஒளியில்
கரங்கள் கூப்பி வணக்கங்கள்!
பொங்கல் வாழ்த்துக்கள்!!

வான் பொங்கும் - மண்ணில்
வளம் பொங்கும் - வாவியிலே
மீன் பொங்கும் - வயற்காட்டிலே
தேன் பொங்கும் - கூத்து
கலை பொங்கும் - ஊரெல்லாம்
கவி பொங்கும் - கற்புநிறை
கன்னியர்தம் கண் வீச்சில்
பொங்குகின்ற காதலிலே -
காளையர்தம்
தோள் பொங்கும் - வீரத்தால்
புகழ்பொங்கும் நாடு - புலிப்பந்தில்
மட்டக்களப்பெனும் நன்னாடு
நம்நாடு
'பொங்கலாம் வாங்க' எனும்
பொருத்தமான தலைப்பினிலே
கவிபொங்கக் கேட்டுக் களித்தோம் -
ஆனாலும்
கட்டியாய்த் தயிரும் பாலும்
களனியில் விளைந்த நெல்லும்
கொட்டிய நம் மண்ணில் -
இதுவரை

எத்தனை எத்தனை பொங்கல்கள்
வந்தன
ஏழைகள் வாழ்வினில்
பொங்கவேயில்லையே
நித்தமும் வியர்வையை நிலத்தினில்
சிந்தியோ
நித்திய வறுமையில் உழவர்
உழைப்பினைக்
கொத்திய மனிதர்கள் கொழுப்பதும்
உலகினில்
கொள்கையில்லார் தம்
கொடுங்கோல் ஆட்சியும்
சத்தியம்! ஒருநாள் சரிந்திடும்
அத்தினம்
சரிநிகர்ச் சமனாய் சகலரும்
பொங்குவோம்.

- செங்கதிரோன்
த. கோபாலக்கிருஸ்ணன் -

## “பொங்கலாம் வாங்க” கவியரங்கம்

# அழைப்பு மடல்



## அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

அழைப்பு அனுசரணை : ரா.லோகிதராஜ்(கண்ணன்), புதுக்குடியிருப்பு

# உழவர் திருநாள்

## நல்வாழ்த்துக்கள்

### செங்கதிர்,கதிரவன்,கவிஞன்,மணிப்புறா

ஆகிய சிற்றிதழ்கள் இணைந்து நடத்தும்

### “பொங்கலாம் வாங்க”

சிறப்புக் கவியரங்கம்

**இடம்**

மட்-புதுக்குடியிருப்புக் கண்ணகி மகா வித்தியாலயம்

**காலம்**

14.01.2013 திங்கட்கிழமை (தைப்பொங்கல் தினம்) பி.ப03.00 மணி

*தலைமை*

கதிரவன்.த.இன்பராசா

*பிரதம அதிதி*

செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன்

*சிறப்பு அதிதிகள்*

திரு.மகாலிங்க சிவம் (செயலாளர்-மட்-தமிழ்ச்சங்கம்)

திரு.மா.சதாசிவம் (உபதலைவர் - கண்ணகி க.இ.கூ)

கலாபூசனம்.செ துரையப்பா (யோகா சிகிச்சை நிபுணர்)

பாவலர்.சாந்தி முகைதீன்

கவிஞர்.வேதமூர்த்தி

*வரவேற்புரை*

சௌ.லெனாட்.லொறன்ஸோ

*நன்றியுரை*

ச.மதன்



*கவியரங்கத் தலைவர்*

பாவாணர்-அக்கரைப்பாக்கியன்

*கவிபாடும் கவிஞர்கள்*

நிலாதமிழின் தாசன் - நெருப்பு

மு.தவராசா - அகப்பை

செ.துஷ்யந்தன் -அரிசி

புதுமைவாணன் - பால்

மண்டூர் அசோகா - சக்கரை

சிந்ரா - பானை

## ஹைக்கூ கோணர்

தலைமுறைக் கோபம்
அடிக்க அடிக்க
அதிரும் பறை

-கவிஞர்.மித்ரா-

# விழிகளின் ஒளி

வெறிகொண்டு
வீசப்படும் குண்டுகளுக்கு
பள்ளிக்கூடமா,
பதுங்குழியா...
தெரியாது.

இரத்தப் பசியோடு
நீளும் கத்திகளுக்கு
வயதான பெரியவரா,
கர்ப்பிணிப்பெண்ணின் வயிறா!
அறியாது.

அதர்மம் ருசித்த
துப்பாக்கித் தடிகளுக்கு
நசுக்கப்படுவது
ஆண்குறியா,யோனியா..
புரியாது.

சிங்கள பூட்ஸ் கால்கள்
எடுத்து வைத்த
ஒவ்வொரு அடியிலும்
ஓராயிரம் தமிழர் உயிர்கள்
நசுங்கிச் செத்தன.

சாப்பிட்ட கையைக்
கழுவுகிற கணம்,
சிறுநீர் கழிக்கிற கணம்,
சாக்லேட் ஒன்றை
சுவைக்கிற கணமொன்றில்...
பாலகன் பாலச்சந்திரனின்
பிஞ்சு உடலைத் துளைத்தன
ஐந்து தோட்டாக்கள்.

மரண பயமேதுமின்றி
விழுந்து கிடந்த
பாலகனின் பார்வையிலிருந்த
தீட்சண்யத்தை
உள்வாங்கி எழுகிறோம்...
உலகத் தமிழர்களின்
ஒருமித்த குரலாய்.

-மு.முருகேஷ், தமிழ்நாடு.

# பெண்ணியக் கவிதை வளர்ச்சி 3

## இலங்கை பெண் கவிஞர்களின் வழியாக...

- மேமன்கவி -

ஒரு கலைப்படைப்பு பெண்ணியப் படைப்பாக உருவாகுவதிலும், உணரப்படுவதிலும், சில முக்கிய அம்சங்கள் பங்கு வகிக்கின்றன. அதில் முக்கியமானது மொழியாகும். அவ்விலக்கியப் படைப்பில் செயற்படும் பெண் நிலை இருப்பு - அவ்விருப்புக்காக அப்பிரதியில் கையாளப்படும் சொல்லாடல்கள் மிக முக்கிய பங்கினை வகிப்பதையே பெண் மொழியாகி, அப்படைப்பு பிரதியை பெண்ணியப் படைப்பாக அடையாளப்படுத்துகிறது.

அந்த வகையில் கமலா விஜேயரத்னவின் அக்கவிதைகளில், அவர், கையாண்டிருக்கும் பாடு பொருள்கள் பெண் சார்ந்து இருப்பதோடு, அதற்காக அவர் கையாண்டிருக்கும் மொழி, பெண் மொழியாக இருப்பதும், அக்கவிதைகளை பெண்ணியக் கவிதைகளாக மாற்றுகின்றன. அதிலும் பெண்ணின் 'உடல் வெளி'யுடன் சார்ந்தவை என்பதால், அக்கவிதைகள் முழுமையாக பெண்ணியப் படைப்புகளாக இனம் காணப்படுகின்றன.

"ஒரு படை வீரனின் மனைவி அழுகிறாள்" எனும் கவிதையும், "வெள்ளைச் சேலை" எனும் கவிதையும் நேரடியாக பெண்களின், குரல்களில் பேச, "அந்த ஒற்றையடிப்பாதையில் வெள்ளைக் கொடி பறப்பது கண்டு...." எனும் கவிதை முதல் வாசிப்பில் பொதுவான ஒரு பார்வையாளரின் குரலில் பேசுவதாக தெரிந்தாலும், அக்கவிதையின் கையாளப்பட்டிருக்கும் "உனதன்னை" 'உன் தங்கை...' என்ற சொல்லாடல்கள், அக்கவிதையும் பெண்ணின் குரலில்தான் பேசுகிறது என்பதை காட்டுகிறது.

கமலா விஜேயரத்ன சார்ந்த சமூக அமைப்பில் பெண் உடல் வெளியுடன்: சார்ந்த ஒரு சொல்லாடல் அல்லது உருவகம் அம்மூன்று கவிதைப்பிரதிகளில் தொடர்ந்து கையாளப்படுவது பெண்ணின் இருப்பை அக்கவிதைகளில் உறுதி செய்கிறது. அச்சொல்லாடல் அல்லது உருவகமானது வெள்ளை நிறம் அல்லது வெள்ளைச் சேலை என்பதாகும். "வெள்ளைச் சேலை" எனும் கவிதையில் அந்த உருவகம் கவிதை முழுவதும் தொடர, "ஒரு படை வீரனின் மனைவி அழுகிறாள்" எனும் கவிதையில் வெள்ளைக்கொடி என்ற உருவகமாக வருகிறது.

மேலும், கமலா விஜேயரத்ன அந்த காலகட்டத்தில் போர்ச்சூழலும், கலவர நிலையியும், தொடர்ந்து நிலவிக் கொண்டிருந்தவையாக இருந்தன என்பதை அக்கவிதைகளில் துல்லியமாகவும், நுணுக்கமாகவும் சொல்லி இருக்கிறார். "அந்த ஒற்றையடிப்பாதையில் வெள்ளைக் கொடி பறப்பது கண்டு..." எனும் கவிதையின் தொடக்க வரிகளான "மழையில் நனைந்து கிழிந்து போன வெள்ளைக்கொடி" எனும் வரிகள். அடிக்கடி அக்கொடி உபயோகிக்க படுகிறது என்பதை சொல்வதன் மூலமும், "வெள்ளைச் சேலை" எனும் கவிதையை

**"இல்லை, இல்லை**
**அலுமாரித் தட்டில் சேலையை வைக்கமாட்டேன்**
**அதைக் கொடியில் தான் போடுவேன்**
**எப்போ தேவைப்படுமென்று எனக்கே தெரியாது"**

எனும் வரிகளுடன் முடிந்திருப்பதன் மூலமும், அவ்விளஞர்களின்; மரணங்கள் நடக்கும் நிச்சயமற்ற தன்மையையும் தொடர்ச்சியையும் பதிவுச் செய்து, அன்றைய காலகட்டத்தின்; போரின், கலவர நிலைமையின் நீட்சியினை நம் முன் கொண்டுவருகிறார்.

இந்த வகையில் போரான வாழ்வை பற்றியும், கலவர நிலையை பற்றியும் இலங்கை பெண் கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதைகளில் இம்மூன்று கவிதைப்பிரதிகள்: மிகுந்த கவனத்தை பெறக்கூடியதாக இருக்கின்றன.

இனி, தமிழில் இலங்கை பெண் கவிஞர்களால் எழுதப்பட்ட நான்கு கவிதைகளை எடுத்துக்காட்டுக்காக பார்ப்போம்.

அருட் கவிதா தேவநாகத்தின்
**"சில வருடங்களுக்கு முன்"**
**ஆழியாளின் "மன்னம்பெரிகள்"**
**ரங்காவின் "உண்மையிலும் உண்மை**

ஜெயந்தி தளையசிங்கத்தின் "இனியும் நான் தனியாக இல்லை" (இக்கவிதைகள் நான்கும் தமிழகத்தில் வெளிவந்த அ.மங்கை தொகுத்த "பெயல் மணக்கும் பொழுது" எனும் ஈழப்பெண் கவிஞர்களின் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டவை).

இந்த நான்கு கவிதைகளிலும் போர் மற்றும் கலவர நிலை என்பன பெண்ணின் உடல் வெளி மீது புரியப்பட்ட வன்முறையையும், பெண்ணின் உடல் எதிர்கொண்ட நெருக்கடிகளையும், சொல்லும் கவிதைகளாகும்.

அருட் கவிதா தேவநாகத்தின் "சில வருடங்களுக்கு முன்" எனும் கவிதையில் ஓரிடத்தில்

**"பருவடைந்து வீட்டினுள் இருந்த என்னை**
**வெளியே கலைத்தனர்." எனத்: தொடங்கி இடையில்**
**"குருதி தேய்ந்த**
**என் தாயின் உடலையே**
**கண்டேன்.**
**எரிகிறது**
**என் மனம் எரிக்கிறது.**

என நகரும் வரிகள் பெண்ணியக் கவிதைப் பிரதியாக நம்மால் அக்கவிதை வாசிக்கப்பட்டு, போரான வாழ்வில் பெண்ணின் உடல் வெளி சிதைக்கப்படும் அவலத்தை என்பதை சொல்லி செல்லுகிறது.

பெண்: நிலையை பொறுத்தவரை பெண் என்பவள் எந்தவிதமான பேதங்களுமின்றி(மதம், நிறம், வர்க்கம், தேசம், இனம், உறவு-பந்தம் என இப்படியாக எல்லா வகையான அடையாளங்களையும் கடந்து அல்லது மறந்து, அவள் பெண்ணாக இருக்கிறாள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அவள் உடல் வெளி சிதைக்கப்படுகிறது என்பதை ஆழியாளின் "மன்னம்பெரிகள்" எனும் கவிதை இப்படி பேசுகிறது.

**"காலப் பொழுதுகள் பலவற்றில்**
**வீதி வேலி ஓரங்களில்**
**நாற்சந்திச் சந்தைகளில்**
**பிரயாணங்கள் பலவற்றில் கண்டிருக்கிறேன்.**
**எனத் தொடங்கி,**
**"அம்மிருகம் துயின்று**
**நாட்கள் பலவாகியிருக்கும்"**
**என பெண்ணின்; உடலை குதறும் அம்மிருகத்தை அறிமுகப்படுத்தி,**

**"அழகி மன்னம்பேரிக்கும்**
**அவள் கோணேஸ்வரிக்கும்**
**புரிந்த வன்மொழியாகத்தான்**
**இது இருக்கும் என**
**அவதியாய் எட்டிக் கடந்து போனேன்"**
**எனச்சொல்லி,**
**"அன்றைய அலைச்சலும்**
**மனக்குமைச்சலும் கூடிய**
**தூக்கத்தின் இடையில் - நானும்**

**அவள்களுக்குப் புரிந்த**
**அதே அதே ஆழத்திணிக்கப்பட்ட**
**பாஷை புரிந்து கொண்டேன்.**
**அருகே கணவன்**
**மூச்ச ஆறிக்கிடக்கிறான்."**

என்றெலாம் பேசி முடியும் கவிதை, சகல பேதங்களை கடந்து, உறவு நிலைகளை கடந்து பெண் உடல் மீதான வன்முறையின் பாஷை பேசப்படும் விதத்தை கூறுகிறது.

இதே விடயத்தை குடும்பம் எனும் கட்டமைப்புக்குள், அது சொந்த அண்ணனாக இருந்தாலும் என்ன அவன் ஆண் என்ற நிலை நின்று வெளிப்படுத்தும், மற்றும் எதிர் நிலையில் ஆணாதிக்கம் வளர்தெடுத்த ஒழுக்கங்களுக்கு அடிமைகளாகி விட்ட பெண்களாக இருப்பினும் என்ன அவர் தம் நடத்தையில் பெளிப்படும் கொடூரத்தை சொல்லுகிறது ரங்காவின் "உண்மையிலும் உண்மை" எனும் கவிதை.

**"விரிந்து கிடந்த**
**கூந்தலை முடித்து**
**கலைந்து போன ஆடைகளை**
**அணிவதற்காய் நானும்**
**உடல் முழுக்க நோ**
**உள்ளத்திலும் பாரம் - ஆனாலும்**
**என் இருப்பு உறுதியானது"**


என பிரகடனப்படுத்தி, இத்தகைய கொடூர நிலைக்கு பின்னும் பெண்ணினத்தின் இருப்பு உறுதியானது எனச் சொல்லி, அத்தகைய கொடூரத்திற்கு எதிரான போராட்டத்தின் தொடர்ச்சியினை பதிவு செய்கிறது.

பெண்ணினத்தின் இத்தகைய நிலைகளை எடுத்துரைக்கும் அத்தகைய பல கவிதைகள் இலங்கை தமிழ் பெண் கவிஞர்களால் 80களுக்கு அதிக அளவில் எழுதப்பட்டு, இதுவரை காலம் இலங்கை கலை இலக்கியப் பரப்பில் 'சொல்லாத' பல 'சேதி'களை சொல்லி இருக்கின்றன. இத்தகைய கவிதைகள் இலங்கை தமிழ் பெண் கவிஞர்களின் முதல் தொகுப்பான "சொல்லாத சேதிகள்" எனும் தொகுப்பு முதல், தமிழகத்தில் அ.மங்கையினால் தொகுக்கப்பட்ட "பெயல் மணக்கும் பொழுது" வரையிலான பல தொகுப்புக்களில் இடம் பெற்றுயிருக்கின்றன.

**வளரும்....**



2013ஆம் ஆண்டின் கவிதைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது **"மகரந்தச் சிறகு"** விருது காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களுக்கு கம்பன் கழகத்தின் சார்பாக அதன் பெருந்தலைவர் மாண்புமிகு நீதியரசர் ஜே. விஸ்வநாதன் அவர்களினால் 22.02.2013 அன்று கம்பன் விழாவில் வழங்கப் பெற்றது.



**10.02.2013 அன்று கல்முனை உவெஸ்லிக் கல்லூரி நல்லதம்பி மண்டபத்தில் நடைபெற்ற, அகரத்தின் "மணிப்புறா" சஞ்சிகை நடாத்திய மு.சடாட்சரன் அவர்களின் 'பாதை புதிது' (கவிதை நூல்) வெளியீட்டு விழாவில் 'செங்கதிர்' ஆசிரியர் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் ஆற்றிய வெளியீட்டுரை.**

கல்முனைப் பிரதேசத்திலே அமரர் கவிஞர் நீலாவணன் ஒரு கவிஞர் பட்டாளத்தையே உருவாக்கியிருந்தார். நீலாவணனின் கவிதைப் பண்ணையிலே வளர்ந்த முதிர்ந்த விருட்சங்களில் ஒன்று, இன்று 'பாதை புதிது' என்ற படைப்பைத் தந்திருக்கின்றது. ஆம்! கவிஞர் மு.சடாட்சரன் இன்று வெளியிடும் கவிதைத் தொகுப்பே அது. நீலாவணனின் வாழ்த்துடன்தான் இப் 'பாதை புதிது' திறக்கிறது – புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால் இது தெரியும். அழகான அட்டைப்படமே நூலின் உயர்வான உள்ளடக்கத்திற்குக் கட்டியம் கூறி நிற்கிறது.

உலகில் எந்த மொழியை எடுத்துக் கொண்டாலும் அம் மொழிப் பிரயோகத்தின் உச்சம் கவிதைதான். கவிதையை எல்லோராலும் ஆக்க முடியாது. அதற்குச் சிறந்த மொழிப்புலமை – நுட்பமான உணர்வு – படைப்பாற்றல் தேவை. இவை சடாட்சரனுக்கு நன்றாகவே வாய்த்திருக்கின்றது என்பது இக்கவிதைத் தொகுப்பைப் படிக்கும்போது தெரிகிறது. ஆனால், இன்று கவிதை எழுதுவது எல்லோருக்கும் எளிதான ஒன்றாகிவிட்டது. அதற்குக் காரணம் 'புதுக்கவிதைப் போக்கு' தான். புதுக்கவிதைத் தொகுதிகள் புற்றீசல்களாய்ப் புறப்படும் காலம் இன்றைய காலம். பெரும்பாலானவையைப் படித்துப் பார்த்தால் என்னவென்றே புரியவில்லை. புரியாததுதான் 'புதுமை' என்கிறார்கள்.

பழந்தமிழ் இலக்கியங்களைச் - சங்ககாலத்துப் பாடல்களைச் சாதாரணமானவர்கள் படித்துப் புரிந்துகொள்வதற்குப் பின்னாளில் உரையாசிரியர்கள் தேவைப்பட்டார்கள். கடினமான செய்யுள் நடையிலே ஆக்கப் பெற்ற சங்க இலக்கியப் பாடல்களைத் தமிழ்க் கவிதையின் முதற்கட்டம் எனக் கொள்வோம். அடுத்து வந்த பக்தி இலக்கியங்களான பன்னிருதிருமுறைகளும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத் திரட்டுக்களும் ஆண்டாள் பாசுரங்களும் படிக்கும் போது அவரவர் மொழிப்புலமைக்கு ஏற்ப ஐம்பது அல்லது அறுபது விழுக்காடுகள் விளங்க முடிந்தவை. அதனைத் தமிழ்க் கவிதையின் அடுத்தகட்டம் எனக் கொள்வோம். தமிழ்க் கவிதையின் அதி உன்னதமான வளர்ச்சிக் கட்டமாக பாமரரும் புரிந்து கொள்ளக் கூடியவாறு பாடல்களை யாத்த மஹாகவி பாரதியின்

யுகத்தைப் பார்க்கிறோம். அதனையே கவிதையின் வளர்ச்சிக் கட்டம் என்கிறோம். புதுக் கவிதைகளைப் படித்துப் புரிந்து கொள்ள பின்னாளில் உரையாசிரியர்கள் தேவைப்படுவார்களோ என்ற நிலையிருப்பின் புதுக்கவிதைப் போக்கை வளர்ச்சி எனக் கொள்ள முடியுமா? என்பது தர்க்கரீதியான வாதமாகும். வாக்கியத்தை முறித்துப் பின் வரிசையிலே வைத்து எழுதியவை எல்லாம் கவிதையாகிவிடுமா? Free verse என்ற வடிவத்தைத் தந்த அமெரிக்கக் கவிஞர் வால்ட்விட்மனை மகாகவி பாரதி ஒப்புக் கொள்ளவில்லை. பிச்சமூர்த்திதான் பிழையாகப் பற்றிக் கொண்டார். புதுக்கவிதையின் பிதாமகன் எனப் போற்றப்படுகின்ற பிச்சமூர்த்தி 'எழுத்து' சஞ்சிகையிலே 1930ல் எழுதிய 'காதல்' எனும் அவரது முதல் 'புதுக்கவிதை' இப்படித்தான் ஆரம்பமாகிறது.

'ஒரு மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை போர்த்தியிருந்தது' – பிச்சமூர்த்தியின் இவ்வுரை வீச்சுக்கு – வசனகவிதைக்கு (வசனம் கவிதையாகுமா என்பது வேறுவிடயம்) 'புதுக்கவிதை' எனப் போர்வையிட்டவர் 'எழுத்து' சஞ்சிகை ஆசிரியர் சி.சு.செல்லப்பாதான். இது கவிதையல்ல. கவிதையை அண்மித்த ஒரு உரைநடையே. சாண்டில்யன் அல்லது சோ.வி.மணிசேகரன் எழுதும் சரித்திர நாவல் ஒன்றின் அத்தியாயம் ஒன்று இப்படித்தான் ஆரம்பமாகும். மேற்சொன்ன 'ஒரு மாந்தோப்பு/ வசந்தத்தின் /பட்டாடை போர்த்தியிருந்தது' என்பதை உடைத்து மூன்று அல்லது நான்கு வரிசையில் எழுதினால் 'புதுக்கவிதை' பிறந்துவிடும். இப்படிப் பார்த்தால் விடுகதைகளும் பழமொழிகளும் கூட கவிதையாகத் 'தலைப்பாகை' கட்டிக் கொண்டுவிடும். தமிழ்க் கவிதைக்கு இன்று நேர்ந்துள்ள அவலம் இது. கவிதை இறுக்கமான ஊடகம் என்பதால் இறுக்கமான உரைநடை கவிதையாகிவிடாது. இத்தகைய சூழ்நிலையில்தான் இன்றைய கவிதைப் போக்கினைச் சரியான தடத்திலே இட்டுச் செல்வதற்கு வந்தாற்போல சடாட்சரனின் 'பாதை புதிது' கவிதை நூல் புதிய பாதையொன்றைச் சுட்டி நிற்கிறது.

யாப்புத்தான் கவிதை என்று நான் சொல்லவில்லை. புதுக்கவிதையை நான் புறந்தள்ளிவிடவுமில்லை. யாப்பை மட்டுமே கொண்ட கவிதை வெறும் எலும்புக்கூடுதான். அதேவேளை, யாப்பைப் புறந்தள்ளிய 'புதுக்கவிதை' எல்லாமே கவிதைகளுமல்ல. கவிதைவேறு; கவித்துவம் வேறு. கவிதை கனியென்றால் அக்கனியைப் பிழியும் போது கொட்டும் சாறுதான் கவித்துவம். யாப்பு தேவைகருதி அல்லது சொல்லவந்த கருத்தை இன்னும் காத்திரமாகச் சொல்வதற்கு அல்லது உணர்வினை உயர்வு நவிற்சியோடு வெளிப்படுத்துவதற்கு

இயல்பாக மீறப்பட வேண்டும். பாரதியே யாப்பை மீறித்தான் இருக்கிறான். (உ+ம்) **ஒரு சக்தி பிறக்கிது மூச்சினிலே......** இலக்கணப்படி பார்த்தால் இவ்வரி ஒரு சக்தி **பிறக்கிறது** மூச்சினிலே என்று வந்திருக்க வேண்டும். அப்படி வந்தால் கவிதையின் வீச்சு மற்றும் சந்தம் பாதிப்படையும். எனவே இங்கே இலக்கணம் இயல்பாக மீறப்பட்டுள்ளது.

அறிந்தவனே உடைத்தால்தான் ஆரோக்கியம் ஆகும். அந்தவகையிலே மு.சடாட்சரன் அவர்கள் யாப்பை அறிந்தவர். அவருடைய கவிதைகளிலே யாப்பு இயல்பாக உடைந்திருக்கிறது. இலக்கியம் கண்டுதான் இலக்கணம். ஆனால் இலக்கணம் இல்லாத இலக்கியம் இல்லை. ஓசை அதுவும் தொடரோசை முக்கியம். சடாட்சரனுடைய கவிதைகளிலே ஓசை இழையோடுகிறது. கவித்துவம் இருக்கிறது. நல்ல படிமங்களை மிகவும் நுட்பமாகக் கையாண்டிருக்கிறார். சிறந்த நல்ல குறியீட்டுக் கவிதைகளைத் தந்திருக்கின்றார். (உ+ம்) 'கொல்லா இல்லாத தோணிகள்' இதற்கோர் சிறந்த உதாரணம். ஓசையும் அதாவது சந்தமும்; உணர்வுநிலையான உள்ளடக்கமுமே கவிதையின் வடிவமாகும். சடாட்சரன் கவிதைகளிலே இவை உண்டு. ஒரு நல்ல கவிதை அதை வாசித்து முடிந்ததும் வாசகனிடத்திலே – அதாவது நுகர்வோனிடத்திலே ஓர் அதிர்வை ஏற்படுத்தவேண்டும். அந்த அதிர்வு மானிட நேயத்தை நோக்கிய அதிர்வாக இருக்க வேண்டும். இலக்கியத்தின் இலக்கும் அதுதான். சடாட்சரன் கவிதைகளிலே மிகவும் நுட்பமாக இப்பண்பு பரவிக்கிடக்கிறது. சடாட்சரன் கவிதைகளிலே இன்னுமோர் சிறப்பு, கவிதையின் இறுதிவரிகளைப் படிக்கிறபோதுதான் அக்கவிதை கூறும் செய்தி – அச்செய்தியைக் கூற அவர் கையாண்ட படிமம் குறியீடு என்பவற்றால் - 'விஸ்வரூபம்' எடுத்து நிற்கிறது. யப்பானிய 'ஹைக்கூ' கவிதை போல முதல் மூன்று அடிகளும் சாதாரணமாக இருக்கும். கடைசி வரியில்தான் அக்கவிதையின் உள்ளடக்கம் 'விஸ்வரூபம்' எடுக்கும். அத்தகைய பண்பினைச் சடாட்சரன் கவிதையிலும் காண முடிகிறது. (உ+ம்) 'பங்கமிலாது வாழ்வோம்' என்ற கவிதை இவ்வாறு முடிகிறது,

**'பங்கமிலாது வாழ்வோம் நிறைவோடு!**
**எவரையும் தேநீர் மண்டியாய்**
**தெருவிலே ஊற்றாமல்**
**தேங்காய்ச் சிரட்டையாய்**
**அடுப்பிலே போடாமல்**

இங்கே **'தேநீர் மண்டியும்'**, **'தேங்காய்ச் சிரட்டையும்'** மிக நுட்பமான படிமங்கள். கவிதைகளுக்குள்ளே நான் ஆழமாகச் சென்று

உரையாற்ற விரும்பவில்லை. காரணம் பிரதம அதிதி மற்றும் சிறப்பு அதிதிகளாக இங்கே வந்திருப்பவர்கள் அனைவருமே கவிஞர்கள். அவர்கள் எல்லோரும் கவிதைகள் பற்றி நயம் கூறவுள்ளார்கள். ஆதலினால் அவர்களுடைய பங்கிலே நான் நுழையக் கூடாது அல்லவா?


இத்தொகுப்பிலே உள்ள சடாட்சரனின் கவிதைகள் தமிழ்க் கவிதைப் போக்கில் ஒரு புதிய பாதையைக் காட்டி நிற்கின்றது. ஆமாம்! பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் தனது அணிந்துரையிலே கூறியிருக்கும் “மரபுரீதியான வெளிப்பாட்டு முறையினை மேன்மேலும் நெகிழ்வடையச் செய்து ‘புதுக்கவிதை’யை அண்மித்துச் செல்கின்ற வெளிப்பாட்டு முறையைச் சடாட்சரன் கடைப்பிடித்துள்ளார்” என்ற கூற்றை நோக்கும்போது சடாட்சரன் ‘பாதை புதிது’ படைத்துள்ளார். ஆகவே, இச்சந்தர்ப்பத்திலே புதுக்கவிதை எழுதும் இளம் கவிஞர்களுக்கு ஓர் வேண்டுகோள். நீங்கள் சங்ககால இலக்கியங்களைக் கூடப் படிக்க வேண்டாம். பாரதி, பாரதிதாசனைப் படிக்கக் கூட இந்த இயந்திரமயமான உலகில் உங்களுக்கு நேரமிருக்காது. குறைந்தபட்சம் நீலாவணனையும் மகாகவியையும் முருகையனையும் படியுங்கள். மேலும், நம் மண்ணின் மைந்தர்களான நு.ஃ.மானையும் - சண்முகம் சிவலிங்கத்தையும் – பஸீல் காரியப்பரையும் - ஈழமேகம் பக்கீர்த்தம்பியையும் - பொத்துவில் யுவனையும் - பாண்டி யூரனையும் - ஜீவாஜீவரெத்தினத்தையுமாவது சற்றுப் புரட்டிப்பாருங்கள். சோலைக்கிளியையும் - சேரனையும் - ஜெயபாலனையும் மட்டும் படித்துவிட்டு அந்த அருட்டுணர்வில் பேனாக்களைத் தூக்காதீர்கள். இவர்களைப் படிக்க வேண்டாம் என்று நான் கூறவில்லை. இவர்களையும் படியுங்கள். அத்துடன் மேற்சொன்னவர்களையும் படியுங்கள். அப்போதுதான் தமிழ்க் கவிதை செழிக்கும். கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் யாப்பு கவிதையாகிவிடாது என்ற கருத்தில், ‘கரைகள் நதி ஆவதில்லை’ என்றார். உண்மைதான். ஆனால், ‘கரைகள் இல்லாத நதி இல்லை’ என்பதையும் ஒப்புக் கொள்ளுங்கள். புதிய பாதையிலே சடாட்சரன் திருப்பிவிட்டுள்ள தமிழ்க்கவிதை நதிக்குக் கரைகள் இருக்கின்றன. எனவே இன்றிலிருந்து சடாட்சரனையும் படியுங்கள். ஏனெனில் இன்று ‘பாதை புதிது’ கவிதைத் தொகுப்பை நூலாக வெளியிட்டு அவர் புதிய தலைமுறைக் கவிஞர்களுக்கெல்லாம் ஓர் ‘புதிய பாதை’ யொன்றைக் காட்டியுள்ளார். நன்றி. வணக்கம்.

# உலக கவிதை தினம்

பங்குனி 21 ஆம் நாளை ஆண்டுதோறும் உலக கவிதை தினமாக (World Poetry Day) ஐக்கிய நாடுகள்கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு அறிவித்துள்ளது. 1999ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அறிவித்தாலும் சில நாடுகள் மட்டுமே இதனை செயற்படுத்தி இன்று உலகம் முழுக்க படிப்படியாக கவிதை நாளை கொண்டாடி வருகின்றன.

இலக்கிய அமைப்புகளின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், கவிதை எழுதுவதை ஆர்வப்படுத்தும் நோக்கிலும் அனைத்து நிலை இலக்கிய அமைப்புகள் இவ்விழாவை நடத்த யுனெஸ்கோ கேட்டுக் கொண்டுள்ளது. சர்வதேச கவிதை இயக்கங்களுக்கு புதிய அங்கீகாரம் மற்றும் உத்வேகம் கொடுக்கவேண்டும், எழுதி வெளியிடுதல் மற்றும் உலகம் முழுவதும் கவிதை கற்பித்தல், படித்தல் ஊக்குவிப்பது என்ற நோக்கில் உலக கவிதை தினம் கொண்டாடப்படுகிறது.

-கவிஞன்-






# நூலங்காடி

உங்கள் நுகர்வுக்காய் எங்கள் பகிர்வு

| | |
|---|---|
| **தலைப்பு** | : கடலோரத்தென்னை மரம் |
| **வகை** | : கவிதை |
| **ஆசிரியர்** | : கவிமணி நீலாபாலன் |
| **முகவரி** | : 65, ஹத்தாவுல, வெலிமட. |
| **வெளியீடு** | : ஜீவநதி |
| **தொலைபேசி** | : 0094 776671581, |
| **விலை** | : **ரூபா 200.00** |




| | |
|---|---|
| **தலைப்பு** | : பாதை புதிது |
| **வகை** | : கவிதை |
| **ஆசிரியர்** | : கவிஞர் மு. சடாட்சரன் |
| **முகவரி** | : 69D, பிரதான வீதி, பெரிய நீலாவணை - 01, கல்முனை. |
| **தொலைபேசி** | : 0094 771341085, 0094 719340485 |
| **விலை** | : **ரூபா 200.00** |



# AATHITHYA DIGITALS




## மட்டுமா நகரில்

துரிதமான சேவை
துல்லியமான வேலை



**வெனர்கள், விளம்பரப் பலகைகள், ஸ்ரிக்கர்கள், canvas paper printing, wide format photo printing**

MEANING OF CREATION...
AATHITHYA
ஆதித்யா
Digitals

**DIGITAL PRINTING**

065 2223134
077 1988531

258/B TRINCO ROAD, BATTICALOA
e -mail : aathithyadb@gmail.com

வணசிங்கா பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு. 065 222 7170